DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -69/2025

Prosecution PW -4

| | | |
|---|---|---|
| Name | திரு.முத்துக்குமார் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 04.02.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தற்பொழுது கடலூர் மாவட்டம் தூக்கனாம்பாக்கம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2025ம் தேதி கடலூர் மாவட்டம் புதுநகர் வட்ட காவல் ஆய்வாளராக இருந்தபோது, எனது வட்டத்திற்குற்பட்ட தேவனாம்பட்டிணம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. சுப்பிரமணியன் என்பவர் காலை 10.00 மணிக்கு கைபேசியில் தொடர்பு கொண்டு, தேவானாம்பட்டிணம் காவல் எல்லைக்குட்பட்ட வள்ளுவர் சுடுகாட்டில் கஞ்சா விற்பதாக இரகசிய தகவல் வந்ததாக தகவல் தெரிவித்து அனுமதிக் கடிதம் எழுதி பெண் தலைமை காவலர் கவிதா என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு, கஞ்சா விற்கும் எதிரிகளை கைது செய்ய பார்ட்டி சகிதம் சென்று எதிரிகளை கைது செய்து தடயச் சொத்துக்களைக் கைப்பற்றி நிலையம் ஆஜராகி தேவனாம்பட்டிணம் காவல் நிலைய குற்றஎண்.10/2025 சட்டபிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பிரிவு 57 NDPS Act ன் கீழ் எனக்கு தனி அறிக்கை சமர்பித்தார். அதை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியும், சாட்சிகளையும் விசாரணை செய்து தலைமைக் காவலர் சுரேஷ்குமார் மற்றும் சுவாமிநாதன் அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று தனிநபர் சாட்சிகள் இல்லாததால் என்னோடு வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அதசாஆ.10. பின்னர் நிலையம் வந்து

சாட்சிகள் சுரேஷ்குமார், சுவாமிநாதன் முதல் தகவல் பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் சுப்பிரமணி மற்றும் சம்பவத்தை வீடியோ பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் தம்பி ராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 1 வது எதிரி ரமனாவை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பிரிவு 52(A)NDPS Act ன் கீழ் மனு தயார் செய்து கைப்பற்றப்பட்ட தடயத்தை படிவம்4 Inventory தயார் செய்து கடலூர் நீதித்துறை நடுவர்3 ல் ஆஜர் செய்து Inventory 4 ல் சான்று பெற்றேன். அந்த சான்று அ.த.சா.ஆ.11. பின்னர் கைப்பற்றிய 1.200 கிராம் கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும், பகுப்பாய்விற்காகாவும் நீதித்துறை நடுவர் முன்னிலையில் தலா இரண்டு 50 கிராம் எடுத்து காக்கி கவரில் எடுத்து மடித்து SHO சில் வைத்து அதற்கு S1,S2 என்று குறியிட்டு நீதித்துறை நடுவரிடம் சான்று பெற்றேன். அந்த சான்று அ.த.சா.ஆ.**12.** பின்னர் கைப்பற்றிய தடயம் மற்றும் மாதிரி தடயத்தை நீதித்துறை நடுவர் முன்னிலையில் புகைபடம் எடுத்தேன் அந்த 7 புகைப்படங்கள் அ.த.சா.ஆ.**13.** பின்னர் மேற்படி நடவடிக்கைகள் குறித்து நீதித்துறை நடுவர் பிரிவு 52(A)(3) NDPS Act ன் கீழ் சான்று வழங்கினார் அந்த சான்று அ.த.சா.ஆ.**14**. மாதிரி தடயம் S1 மற்றும் மீதமுள்ள கஞ்சாவை மாவட்ட மல்கானாவில் ஒப்படைத்தேன். மாதிரி தடயம் S2 வை இரசாயண பகுப்பாய்விற்காக நீதித்துறை நடுவர் மூலம் விழுப்புரம் வட்டார தடவியல் ஆய்வகத்திற்கு தலைமைக்காவலர் சுரேஷ்குமார் மூலம் ஒப்படைத்தேன். பின்னர் 1 வது எதிரியின் வாக்.குமூலத்தின் அடிப்படையில் 2 தலைமறைவு எதிரிகளை தேடி வந்ததில் 3 வது எதிரி ரஜேஷ் என்பவரை புதுவண்டிப்பாளையத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து17.03.2025 ம் தேதி 12.45 மணிக்கு கைது செய்தேன். பின்னர் 3 வது எதிரி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமைக்காவலர் சுரேஷ்குமார், பிரகாஷ் முன்னிலையில் பதிவு செய்தேன் பின்னர் சாட்சிகன் சுரேஷ்குமார், பிரகாஷ் ஆகியோரைவிசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் 2 வது எதிரி நிவாஷ் என்பவர் வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்தவரை சம்பரதாய கைது செய்து பிடி வாரண்ட் மூலம் இவ்வழககின் ஈடுபடுததினேன். பின்னர் விஜி, தடயத்தை பகுப்பாய்வு செய்த விழுப்புரம் வட்டார தடய அறிவியல் உதவி இயக்குநர் ரோஸ்மணி அவ்ாகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.15. இத்துடன் என் விசாரணையை முடித்து 1 முதல் 3 எதிரிகளின் மீது பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

முன் அனுமதி கடிதத்தை நான் பெற்றுக்கொண்டதற்கான எந்த ஒப்புகையும் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை ஓப்போ செல்போன் மூலம் வீடியோ பதிவு செய்தகை பென்டிரைவில் விஜய் ஸ்டியோவில் பதிவிறக்கம் செய்யப்பட்டது. எதிரியின் கைது நமுனாவில் கஞ்சாவின் எடை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 எதிரிகளிடம் இருந்து எவ்வித தடயப்பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகளுககும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும எதிரிகள் மீது தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்